


ஈரோடு தெற்கு மாவட்டம், பெருந்துறை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் விஜயமங்கலம் மேக்கூரில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசுக்கு எதிராக கண்டன பொதுக்கூட்டம் பெருந்துறை தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.சாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் போடி காமராஜ், குடியாத்தம் அன்பு, கழக தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் – பெருந்துறை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பட்டுக்கோட்டை வட்டம், பள்ளத்தூர் கிராமத்தில்

# உயிரிழந்த அரசு மேல்நிலைப்பள்ளி மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் -நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

தஞ்சை, பிப்.13-

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சொக்கநாதபுரம் கிராமம், கொம்புக்காரன் குட்டை பகுதியைச் சேர்ந்த திரு.கண்ணன் – பரிமளா தம்பதியரின் மகள் செல்வி.கவிபாலா (வயது 12) என்பவர் பட்டுக்கோட்டை வட்டம், ஆண்டிக்காடு சரகம், பள்ளத்தூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பில் பயின்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் (10.02.2025) பள்ளியில் மயங்கி விழுந்த நிலையில் உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழுந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழுந்த மாணவி கவிபாலாவின் உயிரிழப்பு அவரது குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவி கவிபாலாவின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம்

# திருநல்லூரில் ஜல்லிக்கட்டுப் போட்டி! கே.கே.செல்லபாண்டியன் கொடியசைத்து தொடங்கிவைத்தார்!

## எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ. - தென்னலூர் எம்.பழனியப்பன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, பிப். 13-

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அடுத்துள்ள திருநல்லூர் (தென்னலூர்) முத்து மாரியம்மன் கோயில் தை திருவிழாவை முன்னிட்டு கோயில் முன்பு உள்ள திடலில் அரசு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி ஜல்லிக்கட்டு போட்டி காலை 8 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.

இந்து, இஸ்லாமியர், கிறிஸ்தவர் என மும்மதத்தினரும் இணைந்து நடத்தும் இந்த ஜல்லிக்கட்டு போட்டியை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் செல்லபாண்டியன், எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ., தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கிவைத்தனர்.

முதலில் கோயில் காளை அவிழ்த்து விடப்பட்டு பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து திருச்சி, திண்டுக்கல், கரூர், மதுரை, தேனி, சிவகங்கை, புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட காளைகளை கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர்கள் தலைமையில் 9 கால்நடை உதவி மருத்துவர்கள், 20 உதவியாளர்கள் தீவிர பரிசோதனை செய்த பின்னரே வாடிவாசலுக்கு காளைகள் அனுப்பப்பட்டு ஒவ்வொன்றாக அவிழ்த்து விடப்பட்டது.

குறிப்பாக இங்கு நடைபெறும் போட்டியில் மாடுபிடி வீரர்களுக்கோ சிறந்த காளைகளுக்கோ எந்தவித மான பரிசுகளும் வழங்கப்படுவதில்லை, இருப்பினும் காளை வளர்ப்பவர்கள் பெரும்பாலானோர் திருநல்லூர் ஜல்லிக்கட்டு வாடிவாசலில் தங்கள் காளைகளை அவிழ்த்த பின்பு தான் மற்ற வாடி வாசல்களில் அவிழ்ப்பதை காலம் காலமாக இன்று வரை கடைபிடித்து வரும் நடைமுறையாகும் என்பது திருநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியின் தனி சிறப்பாகும். பல்லாயிரக்கணக்கானோர் பார்வையாளர்களாக பங்கு பெறும் இப்போட்டியின் பாதுகாப்பு பணியில் ஒரு ஏடிஎஸ்பி, 3 டிஎஸ்பி,12 இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் 300க்கும் மேற்பட்ட போலீஸார், ஊர் காவல் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி. அய்யப்பன், மாவட்ட பிரதிநிதி தாயினிப்பட்டி கண்ணன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மாநில நிர்வாகிகள் – மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் பங்கேற்கும்

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு கூட்டம்!

## அணிச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப்.13-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 17.02. 2025 (திங்கள்கிழமை) காலை 10 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: சிறுபான்மையினரின் பாதுகாவலர் கழகத் தலைவர்; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக.

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தெரிவித்துள்ளார்.

### நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய அரசைக் கண்டித்து

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன பொதுக்கூட்டம்!

## ஒய்.பிரகாஷ், ஈரோடு இறைவன், ஆடுதுறை உத்திராபதி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, பிப். 13 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படியும், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான இளம் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பாக சூளகிரியில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் சூளகிரி தெற்கு ஒன்றிய செயலாளர் பாக்யராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் தலைமையில் “கண்டன பொதுக் கூட்டம்” நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் மாநில இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன், தலைமை கழக பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்காமல் புறக்கணித்தது தொடர்பாக விளக்கிப் பேசினார்கள்.

இந்த பொதுக் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாநில விவசாய அணி துணை செயலாளர் அரியப்பன், மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் சீனிவாச ரெட்டி, திவாகர், ரகுநாத், நாகேஷ், கருணாகரன், ராஜா என்கிற தணிகாசலம், சின்ராஜ், ஸ்ரீதர், ஸ்ரீனிவாசன், பகுதி செயலாளர் ஆனந்தய்யா, வெங்கடேஷ், ராமு ,திம்மராஜ், பேரூர் கழக செயலாளர் தஸ்கிர், உள்ளிட்ட அணிகளின் மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், BLA2, BLC, கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷேக் ரஷித் நன்றி உரையாற்றினார்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் செம்பனார்கோயில் கடைத் தெருவில் உள்ள நெட் செட்ரில் யூ.ஜி.சி. கொண்டு வந்து இருக்கின்ற அந்த புதிய நெறிமுறைகளை திரும்பப் பெற வலியுறுத்தி மாணவர்களின் உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாணவர்கள் திரும்ப பெறுக, திரும்ப பெறுக, பறிக்காதே, பறிக்காதே பல்கலைக்கழக உரிமையை பறிக்காதே என்று மாணவர்கள் வாசகங்களை யூ.ஜி.சி. செயலாளருக்கு, ரெகுலேசன் கமிட்டிக்கு மின் அஞ்சல் அனுப்பி வைத்ததை உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் பார்வையிட்டனர். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளனர்.



திராவிட மாடல் நல்லாட்சி புரியும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையே தேவை என உணர்ந்து சூலூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் சீனிவாசன் ஏற்பாட்டில் அ.தி.மு.க. நீலாம்பூர் ஊராட்சி அவைத்தலைவர் மனோகரன் தலைமையில், தேசிய மனித உரிமைகள் காப்பாளர் அமைப்பின் தலைவர் ஸ்ரீதர், நீலம்பூர் கிழக்கு வீதி அ.ம.மு.க கிளை செயலாளர், அண்ணா தொழிற்சங்க தலைவர் ரமணி – ராகுல் மற்றும் 15க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அன்பரசு, சூலூர் பேரூர் கழக செயலாளர் கவுதமன் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### காஷ்மீரில் கண்ணிவெடித் தாக்குதல் –

# 2 ராணுவ வீரர்கள் வீர மரணம்!

## கண்காணிப்பு பணி தீவிரம்!

ஜம்மு, பிப். 13 -

காஷ்மீரில் கண்ணிவெடி தாக்குதல் 2 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பகுதியில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீரில் உள்ள அக்னூர் செக்டார் அருகே பட்டல் என்ற பகுதியில் ராணுவ வீரர்கள் நேற்று முன்தினம் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்து சிதறியது.

**குண்டு வெடிப்பு இராணுவ வீரர்கள் காயம்!**

இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் 3 ராணுவ வீரர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், சிகிச்சை பெற்று வந்த கேப்டன் உட்பட 2 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர் என்ற தகவலை இந்திய ராணுவத்தின் ஒயிட் நைட் கார்ப்ஸ் படைப்பிரிவினர் உறுதிசெய்தனர். எல்லைப் பகுதியில் கடந்த 4 நாளில் நடைபெற்ற 3வது தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

**கண்ணி வெடி பதுக்கல்!**

குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பகுதியில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கண்ணிவெடியை பதுக்கி வைத்த பயங்கரவாதிகள் யார்? என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.மலையாளம்
**பிப்ரவரி 13 (2000)**



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருச்சி, மணப்பாறை நகரக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பொறுப்புகள் வகித்தவர்.

தியாகேசர் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்ககத் தலைவராக பொறுப்பு வகித்து, தொழிலாளர் நலத்திற்கென பாடுபட்டவர்.

மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் இரா. அருணகிரி
**பிப்ரவரி 13 (2005)**



நாமக்கல் நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும் பின்னர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இரு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், நாமக்கல் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்புக்குழு துணைத் தலைவராகவும், மாநில கூட்டுறவு இணையத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**